بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/03/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இறைஞானமிக்க வழிகாட்டல்களின் ஒளியில்திருக்குர்ஆனின் சிறப்புகள், அதன் அந்தஸ்து, தரம் மற்றும் மகத்துவம் பற்றிய எடுத்துரைப்பு**

துஆக்களில் அழுத்தம் கொடுக்குமாறு ஜமாஅத் மக்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுரை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்றைய நாள்களில் திருக்குர்ஆனின் அழகையும் அதன் சிறப்புகளையும் குத்பாக்களில் எடுத்துரைக்கிறேன். **திருக்குர்ஆனின் அழகையும் அதன் சிறப்புகளையும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆன் எந்த அளவு முழுமையான, அனைத்தையும் உள்ளடக்கிய மறை என்றால், எந்த நூலும் இத்துடன் போட்டி போட முடியாது என்று நான் உண்மையாகவே கூறுகிறேன்.

**அன்னார் உதாரணம் வழங்கியவாறு கூறினார்கள்:** هُدًى لِّلْمُتَّقِيْنَ என்ற வசனத்துடன் போட்டியிடக்கூடிய ஒரு ஸ்லோகம் வேதங்களில் உள்ளதா? நாவால் ஒப்புக் கொள்வது ஒரு விஷயம் என்றால், அதாவது, அதன் கனிகளும் விளைவுகளும் தேவையில்லை என்றால், பிறகு, முழு உலகமும் ஏதாவது ஒரு வகையில் இறைவன் இருக்கிறான் என்று ஒப்புக் கொள்கிறது. பக்தி, இறைவணக்கம் மற்றும் தான தர்மங்கள் ஆகியவற்றையும் நல்லவையாகக் கருதுகிறது. ஏதாவது ஒரு வகையில் இந்த விஷயங்கள்படி செயல்படவும் செய்கிறது.

**இந்துக்களுக்கு பதில் அளித்தவாறு கூறினார்கள்:** பிறகு, வேதங்கள் வந்து உலகுக்கு என்ன கொடுத்தன? ஒன்று, வேதங்களை ஏற்காத சமுதாயங்களிடத்தில் நன்மைகள் முற்றிலுமே இல்லை என்று நிரூபித்துக் காட்டுங்கள். **அன்னார் கூறுகிறார்கள்:** இயல்பாகவே ஆன்மா எதிர்பார்க்கக்கூடிய அந்த முன்னேற்றங்களுக்கான வாக்குறுதியைத் திருக்குர்ஆனை ஆரம்பித்த இடத்திலேயே அளித்து விட்டான்.

சூரா ஃபாத்திஹாவில், اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ எனும் போதனையை வழங்கி இருக்கிறான். மேலும், கூறுகிறான்: அல்லாஹ்வே! எங்களை நேரான பாதையில் செலுத்துவாயாக என்று துஆ செய்யுங்கள். இந்த துஆவையும் வழங்கினான். நேர்வழி காட்டுவதற்கான துஆவைக் கற்றுக் கொடுத்துள்ளான் எனும் போது, எவர்கள் மீது எனது அருளும் கருணையும் உண்டானதோ அவர்களின் பாதையான, அந்த நேரான பாதையில் செலுத்துவேன் என்று வாக்குறுதியும் அளித்துள்ளான். இந்த துஆவுடனேயே சூரா அல்பகராவின் முதல் வசனத்தில் ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛ فِيْهِ ۛ هُدًى لِّلْمُتَّقِيْنَ என்று நற்செய்தி வழங்கி விட்டான்.

நேர்வழிக்கான துஆவைக் கற்றுக் கொடுத்துள்ளான் என்றால், கூடவே அதைப் பெறுவதற்கென ஒரு செயல் திட்டத்தையும் கூறி விட்டான். அதாவது, இதன்படி செயல்படுவதன் மூலமாக இறையச்சம் உடையவர்களுக்கு நேர்வழி கிடைக்கும். ஆக, ஒருவகையில் ஆன்மாக்கள் துஆ செய்கின்றன. அத்துடன் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல், தனது தாக்கத்தைக் காட்டுகிறது. மேலும், (துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்ற) அந்த வாக்குறுதி திருக்குர்ஆன் இறங்கிய வடிவில் நிறைவேறுகிறது. இது அல்லாஹ் புரிந்துள்ள அருளும் கருணையும் ஆகும். ஆனால், அந்தோ! உலகம் இதை அறியாமல் கவனமற்று இருக்கிறது. மேலும், இதை விட்டும் விலகியிருந்து அழிந்து போகிறது.

**அன்னார் கூறுகிறார்கள்:** நான் மீண்டும் கூறுகிறேன். இறைவன் திருக்குர்ஆனில் இறையச்சம் உடையவர்களின் பண்புகளாக எடுத்துக் கூறியுள்ளவற்றை சாதாரண பண்புகளில் வைத்துள்ளான். ஆனால், மனிதன் திருக்குர்ஆன் மீது ஈமான் கொண்டு அதைத் தனது நேர்வழிக்கான நடைமுறைச் சட்டமாக ஆக்கும் போது, அவன் هُدًى لِّلْمُتَّقِيْنَ என்ற வசனத்தில் நோக்கமாக வைத்துள்ள நேர்வழிக்கான அந்த உயர்ப்படித்தரங்களையும் அந்தஸ்தையும் பெற்று விடுகிறான். **பிறகு, கூறுகிறார்கள்:** திருக்குர்ஆனின் போதனை ஒரு முழுமையான போதனையாகும். அந்தக் காலம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகையின் தேவைக்கு மற்றோர் ஆதாரமாகும். மேலும், விளைவை اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ என்ற வசனத்தில் கூறி விட்டான். ஆக, அப்போது காலத்தின் நிலைமைகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகைக்கு ஆதாரமாக இருந்தன.

**அன்னார் கூறுகிறார்கள்:** இது நுபுவ்வத் எனும் அத்தியாயத்தின் இரண்டாவது உட்பிரிவாகும். 'இக்மால் - முழுமைப்படுத்துதல்' என்பது அதிகாரங்களை இறக்கிவிட்டான் என்பது மட்டுமல்ல; அதற்கும் மேற்பட்டு, ஆன்மா முழுமையடைதல் மற்றும் உள்ளம் தூய்மையடைதல் எனும் நிலையை முழுமை படுத்தியுள்ளான்.

காட்டுமிராண்டிகளை மனிதர்களாக, புத்திசாலிகளாக, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மற்றும் இறைமக்களாக ஆக்கி விட்டான். பண்பாடு மற்றும் உள்ளத்தைத் தூய்மை படுத்துதல் ஆகியவற்றிற்கான உயர்ப்படித்தரங்களையும்

மனிதனுக்கு அளவற்ற முறையில் கற்றுக் கொடுத்து விட்டான். இவ்வாறே, இறைமறையையும் முழுமைபடுத்தி விட்டான். திருக்குர்ஆனில் இல்லாத எந்தவோர் உண்மையும் சத்தியமும் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இன்னொரு தவறு பெரும்பாலான முஸ்லிம்கள் மத்தியில் இருக்கிறது. அதாவது, அவர்கள் திருக்குர்ஆனைக் காட்டிலும் ஹதீஸுக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள். ஆனால், இது ஒரு தவறான விஷயம் ஆகும். திருக்குர்ஆன் ஒரு உறுதியான தரத்தைக் கொண்டுள்ளது. ஹதீஸின் அந்தஸ்து கற்பனையாகும். ஹதீஸ் தீர்ப்பளிக்கக்கூடியதல்ல. மாறாக, திருக்குர்ஆன் அதைப் பற்றி தீர்ப்பளிக்கக்கூடியதாகும். தீர்ப்பளிப்பது திருக்குர்ஆனின் பணியாகும். அதே வேளையில், ஹதீஸ் திருக்குர்ஆனுக்கு விளக்கவுரையாகும். திருக்குர்ஆனுக்கு எதிராக ஆகாத அளவுக்கு, அதற்கு ஏற்ப இருக்கும் அளவுக்கு ஹதீஸை ஏற்பது அவசியம் ஆகும். ஆனால், அத்துடன் முரண்பட்டால் அது ஹதீஸ் அல்ல. மாறாக, நிராகரிக்கப்பட்ட கூற்றாகும். ஆனால், திருக்குர்ஆனைப் புரிவதற்கு ஹதீஸ் அவசியமாகும்.

திருக்குர்ஆனில் இறங்கிய இறைக்கட்டளைகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செயல் முறையாக செய்து காட்டி விட்டார்கள். ஒரு முன்மாதிரியை நிலைநாட்டி விட்டார்கள். இந்த முன்மாதிரி இல்லாமல் இருந்திருந்தால், இஸ்லாத்தைப் புரிய முடியாது. ஆனால், திருக்குர்ஆன் அசல் ஆகும். ஆன்மிகக் காட்சி காண்பவர்கள் சிலர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக எத்தகைய ஹதீஸ்களைக் கேட்டறிகிறார்கள் என்றால், அவை மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அல்லது தற்போதுள்ள ஹதீஸ்களை உறுதிபடுத்திக் கொண்டிருப்பார்கள். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மைப் பற்றியும் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:** நானும் சில ஹதீஸ்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாகக் கேட்டறிந்துள்ளேன்.

**திருக்குர்ஆனின் சொற்செறிவு பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

திருக்குர்ஆன் தனது சொற்றொடரில், எந்த அளவு சொற்செறிவு உடையதாகவும், இடத்திற்குத் தகுந்த சொற்களைக் கொண்டதாகவும், உன்னதமானதாகவும், மென்மையானதாகவும், பொலிவை உடையதாகவும் இருக்கிறது என்றால், உதாரணமாக, இஸ்லாத்தைப் பற்றி குறை கூறும் கடுமையான எதிரி ஒருவன் இருக்கிறான். அவன் மிகவும் தலைக்கணம் கொண்டவன். அரபு மொழியின் இலக்கியங்களை சரியாக எழுதுவதில் முழுமையான தேர்ச்சி பெற்றவன். அவனுக்கு, அதிகாரம் படைத்த ஆளுநர் தரப்பிலிருந்து இவ்வாறு ஒரு கட்டளை பிறப்பிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம்: திருக்குர்ஆனின் 3,4 வரிகளுக்கு நிகரான கருத்தை, 20 ஆண்டுகளில் உன்னால் (உருவாக்கிக்) காட்ட முடியவில்லை என்றால், உனக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று கட்டளை இடப்படுகிறது.

பிறகும் கூட, அவனால் ஒருபோதும் அவ்வாறு செய்யவே முடியாது. அதற்காக அவன் உலகத்தின் நூற்றுக்கணக்கான மொழி அறிஞர்களைத் தனக்கு உதவியாளர்களாக ஆக்கிக் கொண்டாலும் சரியே! இதுதான் திருக்குர்ஆனின், அதன் சொற்செறிவின் மேன்மையாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இது ஒன்றும் கற்பனையான அல்லது யூகமான விஷயம் கிடையாது. மாறாக, திருக்குர்ஆன் இறங்கிய காலத்திலிருந்து இந்த சவால் உலகிற்கு முன் உள்ளது. **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** சொற்செறிவிலும் சொல்லாட்சியிலும் திருக்குர்ஆனுடன் போட்டியிடுவது அசாத்தியம் ஆகும்.

**பிறகு, திருக்குர்ஆனின் சொற்செறிவு மற்றும் சொல்லாட்சியின் அழகை எடுத்துரைத்தவாறு ஒரு சபையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** எந்த அளவு அடையாளங்களும் ஆதாரங்களும் இங்கு (எனக்கு) வெளிப்படுகின்றனவோ, இவை உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அதிசயங்களும் அற்புதங்களுமே ஆகும். மேலும், இந்த முன்னறிவிப்புகள் திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகளே ஆகும். ஏனென்றால், இவை அன்னாரைப் பின்பற்றுதலின், திருக்குர்ஆனின் போதனைகளின் கனிகளே ஆகும். இப்பொழுது வேறு எந்த ஒரு மார்க்கம் இப்படிப்பட்டதாக இல்லை. அதாவது, அதைப் பின்பற்றக்கூடியவர் அ(ந்)த மார்க்கத்தி)னால் முன்னறிவிப்புகளை செய்ய முடியும் என்றோ அல்லது அதனிடம் அற்புதங்கள் வெளிப்படுக்கின்றன என்றோ வாதிக்க முடியாது. எனவே, இந்தக் கோணத்தில், எல்லா வேத நூல்களின் அற்புதத்தைக் காட்டிலும் திருக்குர்ஆனின் அற்புதம் மேலோங்கியுள்ளது.

**அன்னார் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆனின் சிறியதிலும் சிறிய ஓர் அதிகாரத்தை எடுத்துப் பார்த்தாலும், அதில் சொற்செறிவு மற்றும் சொல்லாட்சியின் தரம் மட்டுமே இன்றி, போதனைகளின் சொந்த சிறப்புகளையும் உன்னதங்களையும் அதில் நிறைத்து விட்டது தெரியவரும். சூரா இக்லாஸ் -ஐயே எடுத்துக் கொள்ளுங்கள். ஓரிறைமையின் எல்லாப் படித்தரங்களையும் எடுத்துக் கூறி விட்டது. மேலும், எல்லாவிதமான இணைவைத்தலையும் மறுத்துவிட்டது.

இதேபோன்று, சூரா ஃபாத்திஹாவைப் பாருங்கள். எந்த அளவு அற்புதமாக இருக்கிறது. சிறிய அதிகாரம்தான். 7 வசனங்களைக் கொண்டுள்ளது. ஆனால், உண்மையில், முழுத் திருக்குர்ஆனுக்கும் திறனாகவும், சுருக்கமாகவும், பொருளடக்கமாகவும் இருக்கிறது. பிறகு, அதில் இறையிருப்பு, அவனுடைய பண்புகள், துஆவின் தேவைகள், அது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான காரணிகள், வழிவகைகள், பலனளிக்கக்கூடிய உருக்கமான துஆக்களை செய்தவற்கான வழிமுறை மற்றும் இழப்பு ஏற்படுத்தும் வழிகளில் இருந்து தவிர்ந்திருப்பதற்கான நேர்வழி ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்துள்ளது.

பெரும்பாலான நூல்களும், மதம் சார்ந்தவர்களும் மற்ற மதத்தின் தீமைகளையும் குறைகளையும் எடுத்துக் கூறுவதையும், மற்ற போதனைகளைக் குறை கூறிக் கொண்டிருப்பதையும் பார்ப்பீர்கள். ஆனால், மதம் சார்ந்தவர்கள் எவரும் அந்தக் குறைகளைக் கூறும் போது அதற்கு நிகராக ஏதாவது ஓர் உன்னதமான போதனையையும் முன் வைப்பதில்லை. மேலும், நான் இன்ன தீய விஷயத்திலிருந்து காப்பாற்ற விரும்புகிறேன் என்றால், அதற்குப் பகரமாக இந்த நல்ல போதனையை வழங்குகிறேன் என்று காட்டுவதில்லை. இது எந்த மதத்திலும் இல்லை. இந்தப் பெருமிதம் திருக்குர்ஆனுக்கு மட்டுமே இருக்கிறது. அது மற்ற பொய்யான மதங்களை மறுத்துரைத்து, அவர்களின் தவறான போதனைகளைத் திறந்து கூறுகின்ற அதே வேளையில், உண்மையான மற்றும் அசலான போதனையையும் முன் வைக்கிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** சில அறிவீனர்கள், 'எங்களால் திருக்குர்ஆனைப் புரிய முடியாது; எனவே அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டாம்; ஏனெனில், இது மிகவும் கடினமானது' என்று கூறுகிறார்கள். இது அவர்களின் தவறாகும்.

**அன்னார் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆன் கொள்கை ரீதியான விவகாரங்களை எந்த அளவு உன்னதமான சொற்செறிவுடன் புரிய வைத்துள்ளது என்றால், அது ஈடு இணையற்றது; நிகரற்றது. மேலும், அதன் ஆதாரங்கள் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. திருக்குர்ஆன் எந்த அளவு சொற்செறிவும் சொல்லாட்சியும் மிக்கது என்றால், முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்த அரபு நாட்டின் அந்தக் காட்டுவாசி மக்களுக்கு அது புரிய வைத்துவிட்டது. பிறகு ஏன் உங்களால் அதைப் புரிய முடியாது?

நேரான, உண்மையான மற்றும் எளிமையாகப் புரியக்கூடிய உரையாடல் திருக்குர்ஆனில் இருப்பதாகும். இது இறைவன் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ள ஒரு நேரான வழியாகும். மனிதன் திருக்குர்ஆனை கவனத்தோடு படிக்க வேண்டும். அது செய்யுமாறு கூறியுள்ளதையும், செய்யக்கூடாது என்று தடுத்துள்ளதையும் தனித்தனியாக பிரித்து வைக்க வேண்டும். அவற்றின் படி அமல் செய்தால், அதன் மூலமாகவே அவர் தன் இறைவனை மகிழ்வித்து விடுவார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆன் உண்மையான இறைவனை முன் வைக்கிறது. இறைவனுக்கு நன்றி! திருக்குர்ஆன் பலவீனமான இறைவனை முன்வைக்கவில்லை. அதாவது, ஆன்மாக்களுக்கும் எஜமானன் அல்லாத, யாருக்கும் ஈடேற்றமும் அளிக்க முடியாத, எவருடைய பாவமன்னிப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் இறைவனை முன் வைக்கவில்லை. மாறாக, நாம் திருக்குர்ஆன் அடிப்படையில் எத்தகைய இறைவனின் அடியார்கள் என்றால், அவன் நம்மைப் படைத்தவன் ஆவான். நம் எஜமானன் ஆவான். நமக்கு உணவளிப்பவன் ஆவான். அளவற்ற அருளாளன் ஆவான். மேன்மேலும் காட்டுபவன் ஆவான். தீர்ப்பு நாளின் எஜமானன் ஆவான். நம்பிக்கை கொண்டவர்களுக்கு இது நன்றி செலுத்துவதற்கான இடமாகும். அவன் நமக்கு எப்படிப்பட்ட மறையை

**அளித்திருக்கிறான் என்றால், அது அவனது சரியான பண்புகளை வெளிப்படுத்துகிறது. இது இறைவனின் மாபெரும் அருட்கொடையாகும்.**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவு, இறைஞானம், திருக்குர்ஆனின் சிறப்புகள் மற்றும் அதன் அந்தஸ்து தரம் ஆகியவை குறித்த விஷயங்கள் இனிவரும் காலங்களிலும் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்! அல்லாஹ் நமக்கு இந்த விஷயங்களைப் புரிவதற்கும், இவற்றின்படி செயல்படுவதற்கும், திருக்குர்ஆனை ஓதுவதற்கும் மற்றும் அதைப் புரிவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடந்த நாள்களில் வங்காளதேசத்தின் ஆண்டு மாநாட்டில், கலவரக்காரர்களும் பயங்கரவாதிகளும் நடத்திய தாக்குதலைப் பற்றி கூறினார்கள்:* **காவல்துறையும் நிர்வாகமும் உறுதியளித்த பிறகே இந்த மாநாடு நடந்தது. ஆனால், கலவரக்காரர்கள் தாக்குதல் தொடுத்த போது காவல்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தது. அதற்குப் பிறகு, மேலிடத்திலிருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டபிறகு, நடவடிக்கை மேற்கொண்டார்கள். ஆனால், அதற்குள் அநியாயம், அக்கிரமம் எல்லை கடந்து விட்டிருந்தது.**

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தத் தாக்குதலில் ஷஹீத் ஆன மதிப்பிற்குரிய ஸாஹித் ஹஸன் சாஹிப் பற்றிக் கூறினார்கள். மேலும், கூறினார்கள்:* **அல்லாஹ் அநியாயக்காரர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக! நம் மீது கருணையும் அருளும் புரிவானாக!**

*துஆக்களின் பால் கவனமூட்டியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜமாஅத் மக்களுக்கு இவ்வாறு கூறினார்கள்:* **இன்றைய நாள்களில் துஆக்களில் மிக அதிகம் அழுத்தம் கொடுங்கள்.**

*அதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அல்ஜீரியாவைச் சேர்ந்த* ***கமால் பதா சாஹிப்*** *அவர்கள், கனடாவைச் சேர்ந்த* ***டாக்டர் ஷமீம் மலிக் சாஹிபா*** *அவர்கள், ஜெர்மனியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய* ***ஃபர்ஹாத் அஹ்மத் அமீனீ சாஹிப்*** *அவர்கள் மற்றும் கனடாவைச் சேர்ந்த* ***சௌத்ரீ ஜாவேத் அஹ்மத் பிஸ்மில் சாஹிப்*** *அவர்கள் ஆகியோரின் வஃபாத்தை ஒட்டி அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு, அந்த மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகை தொழுவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ
اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ
یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ
یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**